**E.P.No.18/2022 in O.S.No.20/2019**

**நாள் : 09.12.2025**

திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

**மனுதாரரால் 10.10.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணைக்கு இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் உத்தரவு**

**1) மனுதாரரால் 10.10.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையின் சுருக்கம்.**

மனுதாரர் தரப்பில் இக்குறிப்பாணையில் E.P. மனுவில் காட்டப்பட்டுள்ள தபசில் சொத்தானது மேற்படி எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டதற்கான மேற்படி எதிர்மனுதாரர் பெயரில் சங்கரன்கோவில் தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) வழங்கிய பதிவேட்டின் நகலை சமூகம் நீதிமன்றத்தில் ஏற்கனவே மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி பதிவேட்டின் நகலில் வரிசை எண் 35 கலத்தில் தபசில் சொத்தின் கதவு எண் மற்றும் சர்வே எண் காட்டப்பட்டுள்ள விபரத்தின் மேற்படி எதிர்மனுதாரரின் பெயர் துலங்குகிறது என்றும், அதன் அடிப்படையில் கனம் நீதிமன்ற உத்தரவு படி நீதிமன்ற அமீனா தபசில் சொத்தை ஜப்தி செய்துள்ள விபரத்தை கனம் நீதிமன்றத்திற்கு எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்துள்ளதால் சம்பந்தப்பட்ட வீரசிகாமணி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு தபசில் சொத்தைப் பொறுத்து ஜப்தி பதிவு செய்ய வேண்டிய விபரத்திற்கு கனம் நீதிமன்றம் மூலம் தபால் அனுப்ப வேண்டிய விபரத்திற்கு இந்த மெமோ தாக்கல் செய்யப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) நிறைவேற்றுதல் மனு கோப்பின் பரிசீலனையில் இருந்து, மனுதாரரால் நிறைவேற்றுதல் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட கீழவீரசிகாமணி ஊராட்சியின் வீட்டு வரி கேட்பு பதிவேடு ஆவணத்தைப் பார்வையிடும்போது, அதில் வரிவிதிப்பு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.09 17:47:30 +0530

எண்.135 ல் கதவு எண். 65 A பரமசிவன் என்பவர் பெயரில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதில் சர்வே எண் .135 என குறிப்பிடப்பட்டுள்ளது.

3) ஆனால், தபசில் சொத்தினை பற்றுகை செய்வதற்காக சென்ற நீதிமன்ற அமீனாவால் 02.08.2025 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், ".....01.08.2025 நாளது தேதியில் கட்டளையில் கண்ட அலுவலகத்திற்கு நேரில் சென்று மேற்படி அலுவலரை நேரில் இனம் கண்டு மேற்படியாருக்கு பிறந்த Immovable Property Attachment SRO Copy மேற்படியாரிடம் கொடுத்ததற்கு, மேற்படி அலுவலர் வாங்கிப் பார்த்துவிட்டு தபசில் உள்ள சர்வே எண் என்னுடைய பதிவேட்டில் துலங்கவில்லை என்று சொல்லி தெரிவதால் மேற்படி SRO Copy சார்பு செய்ய மார்க்கம் இல்லை என்ற விபரத்திற்கு ரிட்டன் செய்கிறேன்......" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) வீரசிகாமணி சார்பதிவாளர் அவர்கள் தபசில் உள்ள சர்வே எண் தன்னுடைய பதிவேட்டில் துலங்கவில்லை என தெரிவித்திருப்பதால், மனுதாரர் இம்மனு தபசில் சொத்தாகக் காட்டப்பட்டுள்ள சொத்தானது சர்வே எண் .135 ல் தான் உள்ளது என்பதை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தி தபசில் சொத்தின் சர்வே எண்ணை உறுதிப்படுத்தும் செய்யும் வகையில், எதிர்மனுதாரர் பரமசிவன் பெயரிலான சர்வே எண்.135 சொத்துக்கான உரிமை மூல மற்றும் வருவாய் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் 10 தினங்களுக்குள்ளாக தாக்கல் செய்யும்படி இந்நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்படுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.09 17:47:37 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.